INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

*14 கார்த்திகை 2016*


W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA


**ஊடக அறிக்கை: இலங்கையில்தற்போதும் இயங்கிவரும் இரகசிய சித்திரவதைத் தளங்கள் தொடர்பாக சித்திரவதைக்கு எதிரான ஐ.நா குழு விசாரணை மேற்கொள்ளவேண்டும்.**

ஜோகானஸ்பேக்: இலங்கைப் பாதுகாப்புப்படையினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் "வெள்ளை வாகன" கடத்தல்கள், சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவுகள் தொடர்பான சுயாதீன விசாரணையை மேற்கொள்வதற்காக சித்திரவதைக்கு எதிரான ஐ.நா குழு இலங்கைக்குச் செல்ல வேண்டுமென உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேசத் திட்டம் அழைப்பு விடுக்கின்றது. இலங்கையில் சித்திரவதை தொடர்பாக பரிசீலிப்பதற்காக இவ்வாரம் இக்குழு ஜெனீவாவில் சந்திக்கிறது.

*"2015ம் ஆண்டு தை மாதம் அரசாங்கம் மாறியபோதிலும், புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்தவர்கள் தமிழர்களைக் குறிவைத்து சட்டத்திற்குப் புறம்பான ரீதியில் இரகசியத் தளங்களில் தடுத்துவைப்பதும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதுடன் தண்டனையிலிருந்து தப்புவிக்கப்படுவதும் தொடர்கின்றது"* என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேசத் திட்டத்தின் நிறைவேற்று இயக்குனர் யஸ்மின் சூக்கா கூறுகிறார். *"சித்திரவதை மற்றும் கடத்தல்கள் மிகக் கட்டமைக்கப்பட்ட வகையில் இடம்பெறுவதுடன், இது பாதுகாப்புப் படையினரின் மரபணுக்களில் ஊறிப்போயுள்ளது. பாராளுமன்றத்தில் கூட்டு அரசியல் கட்சிகள் மற்றும் ஜனாதிபதி சிறிசேனாவின் கீழான புதிய அரசாங்கம் ஆகியவற்றால் இக்குற்றங்களை நிறுத்த முடியவில்லை. இவற்றை நிறுத்தவேண்டுமாயின் பாதுகாப்புத்துறை சீரமைப்பு தொடர்பான விரிவான திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கான அரசியல் உறுதிப்பாடும் அர்ப்பணிப்பும் இலங்கை அரசாங்கத்திடம் காணப்படவேண்டும். வருந்தத்தக்க வகையில் இலங்கையில் இது காணப்படவில்லை"* என இவர் மேலும் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் மூன்று ஐரோப்பிய நாடுகளில் பாதிக்கப்பட்ட முப்பத்தாறு தமிழர்களிடம் இருந்து சான்றுரைகளைச் சேகரித்துள்ளது. இவர்கள் சிறிசேன அரசாங்கத்தின் கீழ்,புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் படையினரின் கைகளில் கடத்தல், சட்டத்திற்குப் புறம்பான தடுத்துவைப்பு, சித்திரவதை மற்றும் அல்லது பாலியல் வன்முறைகளினால் வருந்தியவர்களாவர். இவர்களில் பத்து நபர்களுக்கு ஏற்கனவே புகலிட தஞ்ச கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பொருள், வெளிநாட்டு அரசாங்கங்களினால் இவர்களுடைய சம்பவங்கள் நம்பகத்தன்மையானவை என ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளன. இழைத்ததாக நம்பப்படும் போர்க்குற்றங்கள், போரிற்குப் பின்னரான சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறியவர்களிடமிருந்து இருநூறு சான்றுரைகளை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேசத் திட்டம் பதிவுசெய்துள்ளது. குற்றமிழைத்ததாக நம்பப்படும் நபர்கள் சிலரை எமது நிறுவனம் அடையாளம் காணவும் ஆரம்பித்துள்ளது.

*"இலங்கையில் இன்றும் சித்திரவதை இடம்பெற்றுக்கொண்டிருப்பதையும், நானும் அதை அனுபவித்துள்ளேன் என்பதையும் வெளியுலகம் அறிந்துகொள்ள வேண்டும்,"* இவ்வருடம் "வெள்ளை வாகனத்தில்" கடத்தப்பட்டு இலங்கையின் வடக்கில் சட்டத்திற்குப் புறம்பான

தடுப்புநிலையத்தில் வைத்து கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட இளம் தமிழ்ப்பெண் கூறியது.

*"நான் சித்திரவதைக்கு உட்பட்டவன், எனக்கு என்ன நடந்தது என்பது மக்களுக்கு தெரியவேண்டும், அத்தோடு இதே போன்று யாருக்குமே மீண்டும் ஏற்படக்கூடாது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்."* பாதிக்கப்பட்ட ஒரு இளம் ஆண் கூறியது. *"அவர்கள் துப்பாக்கிகளுடன் என்னைக் கொல்ல வருவது போன்ற பயங்கரமான கனவுகள் எனக்கு பெரும்பாலும் வரும்"*, என அவர் மேலும் கூறினார்.

2009ம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்த காலகட்டங்களில் மனவடுக்களினால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் இரண்டு மூன்று தடவைகள் தடுத்துவைக்கப்பட்டு மிக மோசமாக வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். குழாய்களால் தாக்குதல், எரிந்துகொண்டிருக்கும் சிகரெட் துண்டுகளால் சுடுதல், சூடான உலோகக் கம்பிகளால் தழும்புகளை ஏற்படுத்துதல், கம்பிகள் மற்றும் கம்பி வட்டங்களினால் அடித்தல், தலையை தண்ணீருக்குள் அமுக்குதல், தலைகீழாக கட்டித் தொங்கவிடல், சுவரில் உராய்தல், பெற்றோல் அல்லது மிளகாய்த்தூள் தடவிய பிளாஸ்டிக் பையினால் மூச்சுத்திணற வைத்தல், அத்தோடு வாய், குதம் மற்றும் பெண்ணுறுப்புக்கள் மூலம் ஆண்களையும் பெண்களையும் கூட்டு பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்துதல் போன்றன இலங்கையின் வழக்கமான சித்திரவதை முறைகளாகும். சட்டத்திற்குப் புறம்பாக கடத்தப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின் பணம்பெற்றுக்கொண்டு விடுதலை செய்ததை பாதிக்கப்பட்டவர்கள் விளக்கியுள்ளார்கள். இவை ஒரே மாதிரியான வடிவத்தில் பல வருடங்களாக பல குழுக்களினால் பல இரகசியத் தளங்களில் இடம்பெற்றதாகவும் அவர்கள் கூறினார்கள். இது இவ்வாறான விடயங்கள் கட்டமைக்கப்பட்ட விதத்தில் இடம்பெறுவதைக் குறிக்கின்றது. 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஆறு சம்பவங்களில், இவ்வாறான விசாரணைகளில் முதன்மை நிலை அதிகாரிகளும் இருந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் கூறினார்கள். அத்தோடு, இவை கடைமட்ட காவல்துறை அதிகாரிகளோ அல்லது பாதுகாப்புப் படையினரோ ஈடுபட்ட சந்தர்ப்பவாதக் குற்றம் அல்ல எனவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கு குறிப்பிட்ட முப்பத்தைந்து பாதிக்கப்பட்டவர்களில் வடக்கில் கடத்தப்பட்ட ஆகக்குறைந்தது ஒன்பது நபர்கள் இலங்கை இராணுவ முகாம்களிலேயே தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக நம்புகின்றனர்.

*"இலங்கையில் நிலைமாறுகால நீதித்திட்டம் தொடர்பாக மனித உரிமைகள் சபையில் மேற்கொண்ட கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் மதிப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஐ.நா உள்ளடங்கலாக சர்வதேச சமூகத்திற்கு காணப்படுகின்றது. நடந்துகொண்டிருக்கும் வன்முறைகளைக் கண்டும் காணாமல் இருப்பது இலங்கை அரசாங்கத்திற்கோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கோ சாதகமாக அமையாது. அத்தோடு பாதிக்கப்பட்டவர்களின் வேதனைகள் அரசியல் காரணங்களுக்காக ஒதுக்கி தள்ளப்படக்கூடாது"* என ஜஸ்மீன் சூக்கா கூறினார்.

முடிவு

**2015ம் ஆண்டு மற்றும் 2016ம் ஆண்டு சம்பவங்களுக்காக அட்டவணையைப் பார்க்கவும்.**

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT